அமிர்தவசனி

133

தெய்வீக மாதபபத்திரிகை

133
Acc. 18580.

மலர் 2	விக்ருதி ௵ ஆடி மீ	விலை
இதழ் 4	ஜூலை—ஆகஸ்டு—1950 ௵	அணா 2½

Page — 133 —

பிரம்மா, விஷ்ணு, சூரியன் முதலிய
தேவர்களுக்கு ஏவல்கள் செய்ய சூரன் கட்டளையிடுதல்
(காந்தபுராணச் சித்திர விளக்கம்—14)

பொருளடக்கம்

			பக்கம்
1.	கண்ணாடி	(திருப்புகழ்மணி)	... 1
2.	ஸ்ரீ வைஷ்ணவர் செல்வம்	(V. S. வெங்கடராமன்)	... 4
3.	அடியார் திருக்கூட்ட திருவிழா		... 9
4.	பக்தியும் இசையும்	(கீவளூர் மீனாக்ஷிசுந்தரம் பிள்ளை)	... 10
5.	உள்ளொளி	(செ. பொன்னையாப் பிள்ளை)	... 15
6.	ஸ்ரீ அருணகிரி அனுபூதி	(ஸ்ரீ வத்ஸன்)	... 19
7.	தேரையர்	(பார்க்கவதாஸன்)	... 29
8.	கந்தர் கலி வெண்பா	(ரசபதி)	... 31
9.	திருக்கூட்டத்தின் விக்ருதி வாழ்த்து	(வரகவி, சுப்பிரமணிய பாரதி)	... 39

'அமிர்தவசனி' சந்தா அறிக்கை

சித்திரைமீ முதல் பங்குனிமீ முடிய வருட சந்தா ரூ. 1-8-0 யும் மணி ஆர்டர் மூலம் அல்லது நேரில் செலுத்தவும். ஆயுள் சந்தா ரூ. 25-0-0.

சிறந்த பாராயணப் புத்தகங்களுக்கு:

பி. டி. பாணி அண்டு கம்பெனி

17, வேங்கடாசல செட்டி தெரு, திருவல்லிக்கேணி

Regd. Trademark "EVEREST" Telephone 2305

P. R. NATHAM & CO.,

High Class Stationers, Importers of Drawing Materials, Artists' Colours and Chinese Crackers

No. 2/285, NETAJI SUBHAS CHANDRA BOSE ROAD, MADRAS-1

Sole Distributors of :—EVEREST BRAND STATIONERY & CARBON PAPERS

அமிர்தவசனி

தெய்வீக மாதப்பத்திரிகை

ஆசிரியர்: சு. முத்துஸ்வாமி

"எல்லோரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே"

மலர் 2	விக்ருதி ஆடி மீ ஜூலை—ஆகஸ்டு—1950	இதழ் 4

கண்ணாடி

(திருப்புகழ் மணி)

" கல்லார் மனத்துடனில்லா மனத்தவ
கண்ணாடியிற் றடங்கண்ட வேலர் "

என்று ஸ்ரீ அருணகிரி திருப்புகழில் பாடிவிட்டார். உலகின்கண் எத்தனையோ கண்ணாடிகள் இருக்க, ஒரு கண்ணாடியை முருகன் தான் வீற்றிருக்கும் தடமாகக் கொண்டானும். தவமெனும் கண்ணாடியாம். வாங்குமிடம் மனத்துள் இருக்கின்றதாம். முருகன் நாமத்தை உரைக்காத கல்லாத மனத்துடன் காணப்படமாட்டாது மனத் தவக் கண்ணாடி

சாதாரணமாய் கண்ணாடிக்கு நிறம் கிடையாது. உருவம கிடையாது. நன்று தீது கிடையாது. அகலம் நீளம் கிடையாது. தான் நான் எனும் தன்மையும் கிடையாது இரவு பகல் கிடையாது. உலகத்தை தன்னிடத்தில்

கோபவதி நாரசிங்கன் மருகோனே
அந்தணர்க் மயல் நாறுமுன்ற தீர்வேனோ.

அடக்கிக்கொள்ளும் சக்தியுண்டு. எதைக் காட்டினாலும் அவற்றின் பிரதிபிம்பத்தை கண்ணாடிக்குள் பார்க்கலாம். சமத்வத்தின் ஓர் ஒளி, கண்ணாடியின் மேல் நிலையைப் பார்த்தால் ஓர் அப்பு அழுக்கு இல்லாத ஸமம்தான். கீழ் நிலையைப் பார்த்தால் கீழிருக்கும் வஸ்துக்கள் காணாதி வண்ணம் தடுக்கப்பட்டிருக்கின்றது.

எது தடுப்பது என்றும் தெரியாதபடித்தான் அமைக்கப்பட்டிருக்கின்றது. இப்படி தூய்மையின் பான்மையாய் மேல் கீழ் அற்று சமத்வமான ஒரு வெளிதான் கண்ணாடி எனப்படுகின்றது. தபோதனர்களின் மனோநிலையை அறிய வேண்டுமானாலும் கண்ணாடியைத் தவிர வேறு உபமானம் இருக்கிறதாகத் தெரியவில்லை. கண்ணாடியின் மேலே ஒரு உருவத்தை ஒட்டிவிட்டாலோ அந்த உருவமிருக்கும் இடத்தில் வேறு ரூபங்களின் பிரதிபிம்பம் காண முடியாது. கண்ணாடி தனக்கு ரூபமில்லாமல் செய்து கொண்டதின் பலன் உலக முழுதும் தன்னகத்துள் பிரதி பிம்பிக்கச் செய்யும் ஓர் ஆற்றலை அடைந்து விடுகின்றது. நான், எனது என்ற ரூபகளங்கத்தை அறவேயொழித்தவர்களின் மனம் சுத்தப் பளிங்குபோல் பிரகாசிக்கின்றது. அந்தப் பளிங்கில் தடம் கொண்டவன் முருகன் என்றார் அருணகிரி.

"நான் எனது என்ற பாவத்தைத் துறந்த யோகிகளின் உள்ளம் ப்ரபஞ்சமே உறைகின்ற கோயிலாகவும், முருகன் எப்போதும் இருந்துவரும் க்ஷேத்திரமாகவும் ஆய்விடுகின்றது.

வெற்றிய வேடர் மங்கைகோள்
சித்தா பத்தர்கள் பெருமாளே

இப்படி பெரியோர்கள் மனத்தில், அதாவது ப்ரபஞ் சத்துக்கே ஓர் செல்வமாக வளரும் கண்ணாடியில் முருகனை, தெய்வத்தைப் பார்க்கலாம். ஜீவராசிகளுக்குள் உயிருக்குயிராய் நின்று அருள்கின்ற தெய்வத்தை உருப் படுத்திக் காண்பிக்க சாதாரணக் கண்ணாடிகளால் முடி யாது. உருவத்தைக் காண்பிக்கும் ஜடப் பொருள்களால் ஏற்பட்டிருக்கும் கண்ணாடிகள் ஜடத்தின் உருவத்தை மாத் திரம்தான் காண்பிக்கும். உருவமாகிய அரங்கத்தில் ஆடு கின்ற உயிரையும், அவ்வுயிருக்குயிராய் நிற்கும் தெய்வத் தையும் காண்பிக்காது. இகபரத்தாசை கழிந்த யோகியர் உள்ளமோ உயிருக்குயிராய் நிற்கும் தெய்வத்தையே முன் னிறுத்திவிடும். இப் பெரியார்கள் சிறைவாசமாய் ஏற் பட்ட தேகத்தை உடைத்தெறிந்து வெளியிலே சஞ்சரிப் பவரேனும் அவர் கொண்ட தூய்மை உள்ளத்தைத் தங்கள் பாக்களிலே வைத்துவிட் டிருக்கிறார்கள். அப் பாக்களிலே பெருந்தகையர்களின் உள்ளக் கண்ணாடியைப் பார்க்கலாம். அக் கண்ணாடியால் அவர் உள்ளத்தில் நிலைபெற்றுத் தூங்கும் தெய்வத்தையும் பார்க்கலாம். இதை வற்புறுத்தி ஒரு அருமையான தேவாரத்தில் அப்பர் உபதேசிக்கின்றார்.

"பூம்படி மக்கலம் பொற்படி மக்கல மென்றிவற்று
லாம்படி மக்கல மாகிலும் ஆரூ ரினிதமர்ந்தார்
தாம்படி மக்கலம் வேண்டு வரேற்றமிழ் மாலைகளால்
நாம் படி மக்கலஞ் செய்து தொழுதுய் மடநெஞ்சமே"

தமிழ் மாலைகளெனும் சப்த ப்ரபந்தங்களால் நாமே பாடி நமக்கே செய்துகொண்ட பளிங்குக் கண்ணாடியில்தான் ஆரூரன் ப்ரதிபிம்பம் விழும். அதைத்தான் நாம் பார்த்து

உய்யவேண்டும் மட நெஞ்சமே! என்று உபதேசித்தார். நமது உள்ளம் அன்பால் தெய்வத்தை உருவாய் பிடித்து நமக்குக் காட்டும் பளிங்காகுக! அதற்குவேண்டித் தமிழ் மாலைகளால் பாடிப்பாடி ஆடியாடி நமது உள்ளப் பளிங்கு களைத் தயாரித்துக் கொள்வோமாக என்றார் அப்பர்.

ஸ்ரீ வைஷ்ணவர் செல்வம்.

15-ஆம் பை

V. S. வேங்கடராமன்

பழக்கூடை மாணிக்கக் கூடை ஆனது.

பழக்காரிக் கிழவி ஒருத்தி கூடை நிறைய இலந்தைப் பழம் வைத்துக் கொண்டு "எலந்தப்பழம் எலந்தப் பழம்" என்று கூவிக் கொண்டு வந்தாள். கனியுண்ணும் வள்ளலாகிய கண்ணன் அவளை வழியில் எதிரே பார்த்தார். "கிழவி! காசு தருவேன். கைந் நிறையப் பழம் தருவாயோ" என்று கேட்டார். கிழவி, சிறு பையன் கைந் நிறையப பழம் தருவதில் நமக்கு நஷ்ட மொன்றுமில்லை என நினைத்துக் "கண்ணா! வா" என வாடிக்கையன்புடன் அழைத்தாள். கண்ணன் தனது கைகளைச் சிறங்கையாக வைத்து விரித்தார். கிழவி பழத்தை அள்ளிப் போடப் போடக் கண்ணன் தன்னோடு வந்த தோழர்கள் பொறுக்கிக் கொள்ளக் கை விரல்களினிடுக்குகள் வழியாகச் சிந்த விட்டுக் கொண்டே இருந்தார். கண்ணனுக்குப் பழம தருவதில் அவ்வளவு ஆநந்தம். கூடைப் பழங்கள் எல்லாம் கண்ணன் கையில் போடப்பட்டன. தோழர்கள் வேண்

ஆதிமுதல் நாரணன்றன் மருகோனே
பாதமலர் சேர, அன்பு தருவாயே.

டிய மட்டும் தின்று கண்ணனை வாழ்த்தினார்கள். யசோதா ராணி யிடம் காசு கேட்கலாம் எனக் கூடையை இடுப்பில் வைத்து முழங்கையால் இருத்திக் கொள்ளக் கூடை திடீரென்று கனக்க ஆரம்பிக்கவே கண்ணால் பார்த்ததே நம்ப முடியாமல் கூடை நிறைய மாணிக்கம் நிரம்பியதைப் பார்த்துக் கிழவி கண்ணன் முகத்தைப் பார்க்கக் கண்ணன் கிழவியின் முகத்தைப் பார்த்துச் சிரித்துக் கொண்டே "கிழவி! காசு போதுமா?" என்று குறும்போடு வினவிப் போனார்.

அச்யுதன் ச்யுதனும் ஆனது

நீ பிறந்த திருவோணம் நீராட வாராய்

கண்ணனும் பலராமனும், பிற நண்பரும் எல்லோருஞ் சேர்ந்து கொண்டு ஆயர்பாடிக்குப் பக்கத்திலுள்ள யமுனைக் கரைக்கு விளையாடப் போயிருந்தார்கள். உரோகிணி தேவி மிக அன்போடு "கண்ணா! தாமரைக் கண்ணா! நின் பிறந்த நாளின்றால், அண்ணால்! ஆனினம் அந்தணர்க்கு உதவுவான் அடைக" என்று காரணங்களை முதலில் சொன்னாள். கண்ணன் வரவில்லை, ஏன் கண்ணன் உரோகிணி கூப்பிட்டதற்கு வரவில்லை என்றால் கண்ணனின் எண்ணம், என் பிறந்த நாள் என்றைக்குந்தானே. நானே பிறவாதவன், நித்யனல்லவோ. அந்தணர்க்காகவே அவதரித்தவன் நான். கோதானம் மட்டும் செய்யலாம் என்பதே. உரோகிணி, "கண்ணா! உடம்பெல்லாம் அழுக்காயிருக்கிறதடா! அவர்கள் எல்லாரும் குளித்து

கெஞ்சினால் வரமாட்டான்

ஆடரவு பூணர் தந்த முருகோனே
பாத மலர்சேர அன்பு தருவாயே

விட்டுச் சாப்பிட்டு விட்டு வந்திருக்கிறார்கள். பார்த்தாயா? நீயும் குளித்துவிட்டுச் சாப்பிட்டுவிட்டு அலங்காரம் பண்ணிக்கொண்டு விளையாடலாம் வா கண்ணா!'' என்றழைத்தாள். தளைத்த காதலின் தளிரடி சிவப்புற நடந்தாங்கு அமைப்ப வந்திலன்; ஆடினன் ஆற்றடை கரையின். ஆட்டந்தானே குழந்தைகட்கு விருப்பம். கண்ணன் வராமற் போகவே உரோகிணி யசோதையைக் கூப்பிட்டுச் சொன்னாள். யசோதை கண்ணனை நோக்கி, "நாரணா! நம்பீ! மணி வண்ணனே இல்லையோ! எம்பிரானே இல்லையோ! கண்ணா! பால் குடிக்க வருவாயோ ? வா அப்பனே! விளையாடி அலுத்துப் போய்விட்டாயே! பசி வயிற்றைக் கிள்ளுகிறதோ இல்லையோ? கன்றுக் குட்டியின் காதில் கட்டெறும்பு பிடித்து விட்டுக் கன்றுக் குட்டியை ஓட வைத்து என்னையும் கன்றைப் பிடித்துக் கட்டப் போகச் செய்து எங்கே வெண்ணெயை உருட்டி வாயில் போட்டுக்கொள் பார்ப்போம். இன்று நீ குளிக்க வேண்டும். நெல்லி விழுது காய்ந்து போகிறதடா. காய்ச்சின வெந்நீர் ஆறுகிறதே! இரவெல்லாம் தேய்த்துக் கொள்கிறாயே. மஞ்சள், மலர், சந்தனம், கண்ணுக்கு மை, அப்பம், சிற்றுண்டி, சர்க்கரை போட்ட பால், கறந்த பால், கடையாத தயிர், பெரிய வெண்ணெயுருண்டை எல்லாம் வைத்திருக்கிறேன். காலையில் தானே நீ சாப்பிட்டாய், அண்ணாவையும் அழைத்து வா. அப்பாவும் (நந்த கோபர்) சாப்பிடப் போகிறவராய் உன்னை எதிர் பார்க்கிறார். நான் பாச்சி தருகிறேன். மணியோன்னே! முத்தோன்னே''

பால் குடி என்றால் பறந்தோடி வருவான்

ராவணனை மாள வென்றதீரனே நாரணன்தன் மருகோனே
உன் தன் பூவடிகள் சேர, அன்பு தருவாயே.

என்று கொஞ்சி அழைக்கவே கண்ணனும் ஓடிவரக் கண்ணன் கையைப் பிடித்துக் கொண்டு வீட்டினுள் நுழைந்து நீராட்டி அலங்கரித்துப் பிறந்த நாள் கொண்டாடி அமுதூட்டி அக மகிழ்ந்தாள்.

தாதெரு மன்றத்தில் கூடிய தர்ம சபை

ஆயரெல்லாருஞ் சேர்ந்து தருணம் போல ஆயர்பாடியின் நன்மைகளை ஆராய்வது வழக்கம். அப்படி ஆராய்வதனாலேதான் ஆயர்பாடிக்குத் தாதெருமன்றம் என்ற பெயர் ஏற்பட்டது. கூத்து முதலியனவும் அம் மன்றத்தில் ஆடுவதுண்டு.

ஒரு சமயத்தில் கிழவரான எல்லா இடையரும் ஒன்று சேர்ந்து நந்த கோபர் தலைமையில் கூட்டம் நடத்தினார்கள். அப்போது உபநந்தன் என்றொரு கிழக் கோனன் எழுந்து "பெரியோர்களே! நாமெல்லோருமே இப் பெருங் காட்டைவிட்டு வேறிடஞ் செல்லவேண்டும். அப்போது தான் நம் செல்வங்களான பசு மந்தைகளுக்கும் ஆயர் பாடிக்கும நன்மைகளேற்படும். குழந்தைகளைக் கொலலும் பெருங் கெடுதிகள் மேன் மேலும் இங்கு தோன்றிக் கொண்டேயுள்ளன. ("அதுவும் அவன் அருள்") பூதனை என்ற வஞ்சப்பேய் மகளிடமிருந்து தைவத்திருவுளத் தானன்றோ நங்கண்ணன் தப்பியுய்ந்தான். ஸ்ரீ ஹரியின் அருளால் குழந்தையின்மேல் வண்டி விழாமலிருந்தது. புயற் காற்றசுரன் காற்பங்தெறிவது போல் நங்குழந்தையை உயரத்தில் தூக்கிச் செல்ல அப்போது திருமாலன்றோ காத்தருளினார். கொல்லையஞ்சாரல் குருந்த மரங்களின் நடுவில் இக் கண்ணனும், அந்தக் குழந்தையும்

அம்பிர் மரவு நின்று தேட அகிதான வன்றன் முருகோனே பூவடிகள் சேர அன்பு தருவாயே.

அகப்பட்டுத் தப்பித்தது ஆண்டவன் தயையாலன்றோ. இதுவும், அதுவும், எதுவுமே அச்யுதனது அருளன்றோ. மேலும் பல கெடுதிகளை இங்கு நாமிருந்து அனுபவிக்காமல் எல்லாவற்றோடும் எல்லாரோடுமே வேறிடம் போகத் தயங்காது கிளம்ப வேண்டும்.

பிருந்தாவனமே நந்தனமே

பிருந்தாவனம் என்றொரு புதிய காடு பெரியதாயுள்ளது. ஆமிரைகள் மேய அங்கு புல்லுண்டு. கனி காய்கள் உண்டு. தேனும் புனலும் உண்டு. மாட கூட மண்டபங்களையும் ஆலயங்களையும் அழகாய்க் கட்டிக் கொண்டால் நந்தன வனத்தை அணிந்த - இந்திரன் நகரனைப் பாங்காகும். கொண்டற்குலம் விளையாடும் அக் கோவர்த்தனகிரியுண்டு. மஞ்சுலாவும் மலையின் முடியழகு காணத்தக்கது. தாழம்பூ வாசனை வீசும் இரு கரைகளையுடைய யமுனை யாறும் உண்டு. வண்டல் படித்துறையும் புது மணல் நிலமுமுண்டு. கதிர் மணி வாலுகக் குன்றுமுண்டு. உங்களுக்கெல்லாம் அங்குப் போவதற்கு விருப்பமானால் இப்பொழுதே போய்விடுவோம். வண்டிகளைக் கட்டுங்கள். பசு மந்தைகள் முன்னால் போகட்டும். தாமதம் வேண்டாம்'' என்றான்.

சமுத்திரம் போலச் சனங்கள் போவது.

அது கேட்டதும் கோபாலர்கள் ஒரே மனங் கொண்டவர்களாய் நலம் நலம் என்று பாராட்டினர். தங்கள் வண்டிகளைப் பூட்டினர். சாமான்களை ஏற்றினர். மந்தைகளை ஓட்டினர். வில்லுகளைப் பிடித்தனர். கிழவரையும் குழந்தைகளையும் மாதர்களையும் வண்டிகளில் ஏற்றி

இடபாக நின்ற கோமளிய நாதிதந்த குமரேசா
பூவடிகள் சேர அன்பு தருவாயே

னர். புரோகிதரது மந்திர வேதோதை ஒருபுறம். வலம்புரிச் சங்கு முழக்கம் ஒரு புறம் அந்தணர் ஆசி ஓசை ஒரு புறம். கொம்பும், தாளமும், காளமும், பேரியும் மழையை ஓட்டின.

புத்தாடை யுடுத்தினர். பொன்னணியும் அணிந்தனர். வண்டிகளில் ஏறிக் கொண்டனர்.

"கண்ணன் கதையின் கந்தர்வகானமே" அக்காடெங்கும் கேட்கப்பட்டது. அக் கோபிமார் பாடும் பாடல்களைக் கேட்டுக்கொண்டே, யசோதையாரும் உரோகிணியாரும், பலராமகிருஷ்ணர்களோடு ஒரு வண்டியில் அமர்ந்தவராய் இடையிடையே

1. "திருமால்சீர் கேளாத செவியென்ன செவியே" என்றும்,
2. "கரியவனைக் காணாத கண்ணென்ன கண்ணே"
கண்ணிமைத்துக் காண்பார்தங் கண்ணென்ன கண்ணே" என்றும்,
3. "நாராய ணாவென்னா நாவென்ன நாவே" என்றும்,
4. "புள்ளூர் கடவுளைப் போற்றுதும் போற்றுதும்" என்றும்

தாமும் ஹரிநாம ஸங்கீர்த்தன ஸ்மரணங்கள் செய்து கொண்டு பிருந்தாவனஞ் சென்றனர்.

அடியார் திருக்கூட்ட

விக்ருதி முதல் நாள் திருவிழா

சென்னை மல்லிகேஸ்வரர் திருக்கோயிலில் திருப்புகழ் மணி T.M. கிருஷ்ணசாமி ஐயர் அவர்கள் தலைமையில்பிரதி ஞாயிறுதோறும் கூடி மகிழும் அடியார் திருக்கூட்டம்

சிவன் பங்கங்கி குந்தா எருளுமா முருகா
பொங்கும் பெரும் பாதகனை யாளுவையோ.

விக்ருதி ஆண்டு சித்திரைத் திங்கள் முதல் நாளன்று திருக் கோயிலில் கூடி, ஸ்ரீ குமார பரமேஸ்வரன் திருவருள் விலாசத்தில் ஈடுபாடு கொண்டது. முதலில் கீழ் வேளூர் மீனாட்சிசுந்தரம் பிள்ளை யவர்கள் கடவுள் வாழ்த்து பாட, அதன் பிறகு திருப்புகழ் மணி அவர்கள் தலைமையில் R. P. சேதுப் பிள்ளை, இளவழகனார், துரையரங்கனார், ஸ்ரீநிவாசராகவன், இரசபதி, இராமலிங்கம் முதலானோர் ஒவ்வொருவரும் திருவருள் விலாசம் குறித்துச் செய்த சொற்பொழிவில் இன்பங்கொண்டாடினர் அடியார்கள். விரோதியகன்று, விக்ருதி பிறந்தது. முருகா! பரமா! குமரா உலகிற்கு அமைதிதா, யாவருக்கும் கண்ணருள் செய் என்ற பிரார்த்தனையுடன் கூட்டம் இனிது நிறைவு பெற்றது

பக்தியும் இசையும்

(கீழ்வேளூர் மீனாக்ஷிசுந்தரம் பிள்ளை)

ராகம் : மயூரத்வனி

22-வது கர்த்தா, கரஹரப்ரியாவில் ஜன்யம் — உபாங்கராகம்

ஆ : ஸரிமபநிஸ்

அ : ஸ்நிதமரீஸ

ஔடவ, ஔடவ, ராகம் — தாளம்: ஆதி

ஒருகலைச் சவுக்கம், முக்காலிட்ம் ஆரம்பம்

ஸட்ஜம், சதுஸ்ருதி ரிஷபம், ஸுத்தமத்யமம், பஞ்சமம், கைவிசி நிஷாதம், ஸட்ஜம், ஸட்ஜம், கைவிசி நிஷாதம், சதுஸ்ருதி தைவதம், ஸுத்தமத்யமம் சதுஸ்ருதி ரிஷபம், ஸட்ஜம்,

---

மனோலயந்தரு நாதா ஆதிகு புயவேலே

நூபுர பாத பங்கய மீதே யான்வது கருதாயோ

குறிப்பு: மேலே குறிக்கப்பட்ட ஸ்வரங்களே நடப்பினும், ஆரோஹண, அவரோஹண மார்க்கத்தில் ஆரோஹணத்தில் நிஷாதம் நீண்டு ஒலித்தும், அவரோஹணத்தில், ரிஷபம், மத்யமத்திலிருந்து திடீரென குதித்து மத்யமத்திலிருந்து இறங்கி நீண்டு ஒலித்தும் ராகபாவத்தை நன்கு விளக்கும்,

பல்லவி

3 4
ராக ஸுதா ரஸ பானமு ஜேஸி
ரஞ்ஜில்லவே ஓ மனஸா (ரா)

அனுபல்லவி

3 3 3 4 3
யாக யோக த்யாக போக
2 3
பல மொஸங்கே (ரா)

சரணம்

3 3
ஸதா ஶிவ மய மகு நாதோங்கார ஸ்வர
3 3 3
விதுலு ஜீவன் முக்துலனி த்யாகராஜு தெலியு—(ரா)

கருத்துரை

"ராக ஸுதாரஸ பானமுஜேஸி ரஞ்ஜில்லவே ஓ மனஸா."

ஸ்வரக் கூட்டங்களால் இணையப்பெற்று, அதன் இயக்கத்தால் நிகழுகின்ற ஒலிஇணைப்பின் இசைத் திறனின் ராகத்தினுடைய இனிமையான ஒலிரஸத்தைப் பருகி இன்பமுறு மனமே. **"யாக யோக த்யாக போக பல மோஸங்கே."** அப்படி நீ பருகி இன்பமுறுவாயேயானல்

உலாசமிகு நிகழ்போத மானபர மருகோனே
பொலிவான பாதமலர் அருளாயோ.

உனக்கு யாகத்தினல் வரும் இன்பமும், யோகம்செய்து அதனல் பெறப்பெறும் இன்பமும், (த்யாக,) மக்களுக்கும் இந்ததேசத்திற்கும் பணியாற்றும் உயர்ந்த பண்பினல் வரும் சேவையால் வரும் இன்பமும், மற்றும் எல்லாவிதமான போக பாக்யங்களை அனுபவித்தால் வரும் இன்பமும் போன்ற எல்லாவிதமான இந்த தெய்வீக இன்பங்களையும் கொடுக்கும், மனமே.

இன்னும் "**ஸதாஶிவ மய மகு நாதோங்கார ஸ்வர விதுலு.**" ஓங்காரமென்னும் ப்ரணவத்துள் பிறந்த ஸ்வர நாதமாகிய, ஸதாசிவத் தன்மையில் லயித்த இன்பத்திற்கு ஒத்த தன்மையில் உன்னை இருத்தி எப்பொழுதும் அழியாத உன்மத்த நிலையான, தனித்த, ஏகாக்ர சித்தத்தைக் கொடுத்துப் பேரின்பமுறச் செய்யும். இதை அறிந்து நீ மஹா முனிவன் தத்துவத்திற்குச் சென்று வாழலாம். "**ஜீவன் முக்துலனு.**" இப்படிப்பட்ட தன்மைக்குச் சென்றவர்கள் இவ்வுலகில் இந்த உடலோடு இணைந்திருந்தே உடலைப் பிரிந்த பின்பு உயிர் அனுபவிக்கும் முக்தி இன்பமாகிய மோக்ஷ இன்பத்தை அனுபவிக்கின்றவர்களாக ஆகிறார்கள். "**த்யாகராஜு தெலியு.**" இந்த ரகஸ்யத்தைத் த்யாகராஜனுகிய நான் நன்கு அறிவேன். ஆதலால், மனமே, நீ இந்த ரகஸ்ஸுதா ரஸ பானம் செய்து பேரின்பமுற்று இருப்பாய். வீணே உலகில் பலபல வழியில் சென்று, அங்கெல்லாம் உண்மையும் உத்தமமும் ஆன இன்பம் கிட்டுமென்று அலையாதே மனமே என்று உபதேசிக்கிறார் **த்யாகப்ரும்மம்** மனமுள்ள மனித இனத்திற்கே வினயமாக.

நிதிஞான போதம் அரனிருகாதி லேயுதவு நிபுணு பொலிவான பாதமலர் அருள்வாயே.

கருத்துள்ளுரை

உலகிலே மனிதன் எந்த மார்க்கத்திலும் உத்தமமான இன்பத்தையும், தெவிட்டாத இன்பத்தையும், அழியாத இன்பத்தையும், குறையாத இன்பத்தையும் அனுபவிக்க ஒன்றுமில்லை. ஆனால், உணர்ச்சியின் வயப்பட்ட பல பாவங்கள் நிறைந்த, ஓங்காரத்துள் பிறந்த, ஒலிக் கலையின், ஸ்வரப் பகுப்பால் ப்ரகாசிக்கின்ற, ராக நிகழ்ச்சியின் வாயிலாகத்தான் மனிதன், அழியாத, தெவிட்டாத, குறையாத, ஒப்பு உவமை சொல்லமுடியாத, இன்பத்தைப் பெற்று அனுபவிக்க முடியும்.

மேலும், எப்போதும் பரிபூரணத்வம் அடைந்த தன்மையில் இறைவனை நேரில் கண்ட சந்தோஷ சாந்த தத்வ உணர்ச்சியில் ஸதா இன்புற்று இந்த உலகிலேயே மறு உலக இன்பமாகிய, சிவத்தோடு இரண்டறக் கலந்த இன்பத் தத்துவத்துள் செறிந்து, பேரானந்தத்துள் திளைத்து எந்த நிலைமையிலும் துக்கமென்பதே அறியாது, மறு உலக இன்பமாகிய இன்பத்தை இங்கிருந்தே அனுபவித்து ஆனந்தமுற்றிருக்கலாம். இசைக் கலையின் ராக பாவ, ஒலி இயக்கத்தின் வாயிலாக என்பது தெய்வீக இசை. இலக்கியத் தெய்வம் த்யாகப்ரும்மம் என்பது கருத்து, இதனுள் மறைந்து செறியும் கருத்து. எந்த பாஷையின் உதவியும் தேவையில்லை, என்பதும், பல பாஷைகளால் அறியப்படும் தத்துவமெல்லாம் இந்த இசைக் கலையாம் ஒலிப் பாஷையின், ராக இயக்க வாயிலாகவே அடையலாம் என்பதே த்யாகப்ரும்மத்தின் தீர்ப்பு.

நாலுமறை கற்ற நான்முகனு தித்த நாரணனுமெச்சு மருகோனே
ஆவிதனர் வுற்று வாடுமெனை நித்தம் ஆசைகொடு அணைக்க வரவேணும்.

ஆதலால், பக்தி செய்வதற்குப் பாஷைகளின் உதவி தேவை இல்லை என்பதும் இதனால் பெறப்படுகின்றதல்லவா? இன்னேக்கங் கொண்டேதான் நான் எடுத்துக் கொண்டது பக்தியும், இசையும் என்னும் விஷயம். ஆனால் மொழிகளோடு கலந்த இசை வேண்டாமென்பதில்லை. அப்படியும் பக்தி செய்யலாம். ஆனால் அதனின் உயிர்த் தத்துவம் ஒலி, நய, பாவ இசைக் கலை, ஒலி இலக்கண மார்க்கத்தால் வந்த இராக இயக்கத் தத்துவமேதான் முக்கிய உயிர்த் தத்துவம் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது.

மயூரத்வனி ராக அர்த்தபாவம்

மயிலானது எப்படி முருகனை நினைந்து அவனை விளித்து கழுத்தை உயரத் தூக்கி, சத்தமிட்டு, அழைக்கின்றதோ, அதுபோல் இந்த ராக ஸ்வர ஏற்றம் ஆரோஹணித்து இறைவனை விளிப்பதுபோல் அழைத்து மறுபடியும் அதே மயில் விளித்தபின் தன் நீண்ட கழுததைத் தொப்பென கீழே இறக்கி சத்தமிடுகின்றதோ அதுபோல் அவரோஹண மார்க்கத்தில் மரீ, என்று தொப்பென்று இறங்கி முருகா வந்து என்னைக் காப்பாற்ற வேண்டுமையா என்று தனது நிலைமையை உணர்த்தி வேண்டிக்கொள்ளும் தன்மையாம். இனநிலைப் பண்பு பாவ உணர்ச்சித் தத்துவமாகும். இதனை வலியுறுத்தவே இந்த ராகத்திற்கு (மயூரத்வனி) என்று பெரியோர்கள் பெயரிட்டு இதனின் உண்மை நிகழ்ச்சியை விளக்கி உணர்த்தியுள்ளார்கள். இந்த ஒலிப் போக்கைச் சிந்திப்பவர்கட்கு நன்கு விளங்கவும் செய்யும்.

மயில்மேல் அவனியை வலமாய் வருவோனே
உனதருதாள் மலரடி தொழுமாறு அருள்வாயே.

மயூரத்வனி என்ருல், மயிலின்குரல் ஒத்தஒலி நயமாகும் என்பது பொருள் கவனிக்கவும்.

தாள, கால, கதி, இட, தத்துவ, இலக்கணம்.

இந்தக் கருத்தமைந்த பாட்டை, இந்த ராகத்தில் பேசியதோடு சதுஸ்ர எண்ணிக்கையை உடைய சம நோக்கில், தன்னுடைய அவாவின் அவசரத்தைக் குறிக்க மத்திய காலமான நடுத்தர அளவில், மேலும் இவ் விஷயத்தைச் சமநோக்கான சதுஸ்ர நடையில், ஆனுல் இந்த மனமானது வேறு எங்கெல்லாம் சென்று தான் சொல்வதுப்படி கேட்காததால் சிறிது வலிந்து கோபித்துக் கொண்டு முக்காலிடத்தில் ஆரம்பித்துப் பேசி, இசை, இயல், தாள, லய, கதி, இட, இலக்கணங்கள் பொருந்தப் பேசியுள்ளார் த்யாகப்ரும்மம், கவனிக்கவும்.

உள்ளொளி

(செ. பொ. புலவர்)

உள்ளொளி என்பது, உள்ளம் என்பதும் ஒளி என்பதும் சேர்ந்தியன்ற ஒரு சொல். இனி உள் என்பதும் ஒளி என்பதும் சேர்ந்தது எனவும் ஒருவகை. ஒளி என்பது சாதாரணமாக வெளிச்சம் என்பதாகும். ஒரு சாரார் முன்குறித்த பொருளைக்காட்டுவர். இயற்கை வசப்பட்டார் பின்குறித்த பொருளைக் காட்டுவர்.

'உள்ளொளி காட்டி' என்ருர் ஒருவர். உள்ளத்தில் ஒளிகாட்டி என்பது பொருள். எனினும் ஒவ்வொன்றினுள்ளும் ஒளி காட்டி என்றே பொருள் கொள்ள வேண்டும். உள்ளம் என்பதில் ஒளியைக் காணுவோம். அதுவும் மனித

திருவத்திகைப் பதிமுருகப் பெருமானே
மனக் கவலை ஒழித் தருள்வாயே.

உள்ளத்தில் ஒளி உண்டாவது எப்படி? அதை எவ்வாறு காண்பது? மனித உள்ளம் அன்பின் அடிப்படையிலே ஒளி பெறுகிறது. இன்சொல் உடையவர்களிடத்தில் அன்பு உண்டாகும். சிந்திப்பு என்ற வழியிலே நிற்கும் ஒருவனது உள்ளம் ஒளிபெறும். மலையிலுதித்து மாகடலில் கலக்கும் ஆற்றின் நிலையினை ஒத்தது உள்ளம். உள்ளத்தை விட அறிவே இதற்குப் பொருந்தும். உள்ள உணர்வு அறிவு. உள்ளம் ஒளிபெறின் அறிவு ஒளிபெறும். நினைப்பதும் செய்வதோடு ஒக்கும். நினைப்பது உள்ளம். அறஞ் செய விரும்பு என்பது ஓர் எடுத்துக்காட்டு; உதாரணம்: உள்ளத்தால் நினைத்துப் பார்த்து அறிவினால் ஆராய்ந்து முடிவுகட்டவேண்டும். 'ஆய்ந்து அடங்கி, என்றார். மனத்துக்கண் மாசு இல்லாதிருத்தலே ஒளிபெற்றமையாகும். அடக்கம் கொண்டார் அவ் வொளியை நன்றாய் அறிவர். பொறாமை, வஞ்சகம், சூது இவை எல்லாம்கூட மனத்தைக் கெடுக்கின்றன. சிந்தனை கொண்டவன் துன்புறுவதில்லை. யோக சாதனப் பயிற்சியுடையார் குண்டலி யோகத்தால் ஒளியைப்பெறுகிறார்கள். பெறுகிற முறை கடினமெனினும் சிறந்ததுதான். துறவறம் புகுவார் காட்டிற் சென்று காய்கறி இலை முதலிய உண்டு உடலிளைத்து வாடுதலைவிட இல்லறத்தில் துறவறம்காணுதலே சிறந்தது. தங்கருமம் செய்வாரன்றோ தவஞ்செய்வாராவர். இல்லறம் இனிதாய் பற்றற்ற நிலையன்றோ துறவற நிலையாகும்.

உள்ளுவதெல்லாம் அறம். அறம் தருமமன்று. தருமம் அறத்தின் ஓர் உறுப்பு. அறம் நேரான சரியான வழியில் செல்லல். உள்ளுதல் மனத்தில் நினைத்து அதன்

தேவனூர் விளங்க வந்த பெருமானே
ஆவல்தீர என்று நின்று புகழ்வேனே.

படி நடத்தல். அதையே வள்ளுவர், 'உள்ளுவ தோரு மறனே' என்றார்.

மனத்துக்கண் மாசின்றி உள்ளுவது அறனாய் வாழ வேண்டும். மாசில் வீணை, வீசுதென்றல் என்ன இன்பம் பயக்கும்; உள்ளொளி சிறந்த இன்பந்தரும். நீண்ட இன்பந்தரும், காலத்துக்குத்தக்க கோலம், நாட்டிற்குத் தக்க நடை, இவை மனித வாழ்வில் மிளிர வேண்டும்.

காதலர் இருவர் கருத்தொருமித்து அன்புமிகுந்து வாழ, அவர்கள் உள்ளம் ஒளி பெற்றதாகும். ஐந்நூறு ஆண்டுகளுக்குமுன் காணுவோம், திருமூலர் இருந்தார். அவர்பாட்டில் அன்பேசிவம் என்றார். அன்பிலிருந்து அருள் பிறக்கும். அடக்கத்திலிருந்து அன்பு உண்டாகும். வள்ளுவர் சொல்லுகிறார் :- 'அன்புடை இருவர்மாட்டுப் பிறப்பதே அருளுடைக்குழவி'. அன்பில் தோன்றுவது தூய்மை, தூய்மைதான் ஒளி எனப்படுவது; ஒளிபெறும் வழியைக் காண்போம்.

பொறாமையின்மை, வஞ்சகமின்மை, போட்டியின் மை, சூதின்மை, அன்புடைமை, அடக்கமுடைமை, இன் சொல்லுடைமை, இவையேழும் மனிதனுக்கு இன்றியமை யாதன. நோக்கம் பரந்து தன்னலம் கருதாத உள்ளம் வேண்டும். 'தன் கடன் பணிசெய்தல். என்கடன் பணி செய்து கிடப்பதே' என்றார். அவர் விரும்பும் அருளை யடைய வழி என எண்ணிய சிறந்த பரந்த விரிந்த நோக்க மாகும். பணிசெய்தல் யாருக்கும் நன்று. பணியினின் றும் உண்டாவதே மேற்குறித்த ஏழும். பணியில் ஊற

முடிபொரு பதுமாள வொருசாம் விடுமொரு கரியவன் மருகோனே
உயர் தாள் அடைவது நவமிக நீனவது தருவாயே.

வேண்டும், நினைக்க வேண்டும், கைக்கொள்ள வேண்டும் இயற்ற வேண்டும். அன்பெனும் பிடியுளகப்பட்டு அருளினையடைய வேண்டி என்புருகப் பணியியற்றி நின்ற அப்பர் அருளையடைந்தாரன்றோ ; மறுப்போர் மறுக்கலாம. வரலாற்றுச்சான்று ; பாடியபாட்டு ; கல்வெட்டு ; இவைகளே காட்டும் உண்மையை.

எல்லா உயிரிலும் ஒளியைக் காணுகிறார் வள்ளுவர். எல்லா உயிருந்தொழும் ; தொழுதல் மனத்து அன்பு காட்டுதல், மனிதனன்றி மற்ற உயிர்கள் வாலாட்டுதல், குழைதல், முதலியனவற்றால் அன்பினைக் காட்டும். வள்ளுவர் கைகூப்பித் தொழும் என்று சொன்னார். சோறு உண்டவனை, என்ன செய்தாய் ; என்றால், சோறுண்டேன் என்பான். சோறுமட்டுமோ உண்டான் ? அதனுடன் கறி வகைகள் உண்டான். சிறப்புப்பற்றி ஒன்றைமட்டும் சொன்னான். மறைநதுநின்ற ஒளி ஒளிர்கிறது. நாய் ஒளி பெற்ற போதில் நன்றி முளைத்து விடுகிறது. ஒளியிலே இனிமையைக் கண்டார் இராமலிங்கம் தொன்றுதொட்டு வரும் மரபு ஒன்றுண்டு. பெண்டிர் விளக்கை வணங்கல். ஒன்றும் அறியாக் குழந்தையே ஒளியைக் கண்டு அடக்கம் கொள்ளுகிறது. இயற்கைப்புலவர் வெளியிலே ஒளியைக் கண்டார். ஓவியத்திலே ஒளியைக் கண்டார்.

மரம் ஒன்று வளர்கிறது. ஒளிபெறுகிறது, கண்ஒளி பெற்றாற்போல. அம்மரம் தண்ணீரின்றி கருகிடஒளியில்லை. கணவன் இறந்த மனைவியின் நிலைபோல. பகலில் ஒளி. இரவில் ஒளி, நன்றாய்க் காணலாம் சிந்தனை வழியில். கருப்

அறிவுட னேது மாதவர் பெருவாழ்வே
துலையிலை மாறு போருயிர் சுழல்வேனோ.

பாய் இருக்கும் வெடி மருந்தில் ஒளி, கம்பியில் அடங்கும் மின்சார ஒளிபோல. மணியில் அடங்கியிருக்கும் ஒளியைப்போல. மெருகுஎன்பதும் ஒளிஎன்று கொள்ளலாம். கண்ணை மூடினால் ஒளி. ஒளி என்பதை 'எனாமல்' என்பர் ஆங்கிலத்தில். பல்லிலே ஒளியிழந்தது என்றால் சொத்தை.

ஆகப் புதுமை என்பதே ஒளி எனலாம் எனத்தோன்றும். புதுமை ஒளி என்பதாம் அது. மரம் இழைக்க இழைக்கப் புதுமை தோன்றுகிறது. அதிலே ஒளி. வளர்கின்ற இளமையின் முகப்பொலிவு இருக்கிறது. அதிலும் ஒளி. தோலின் பொலிவு; அதுவும் ஒரு ஒளி. ஒளிகாண் மனிதனே உலப்பிலா ஒருவன்?

உள்ளொளி வளர்க!
உள்ளொளி வாழ்க !

ஸ்ரீ அருணகிரி அனுபூதி

(ஸ்ரீ வத்ஸன்)

ஸ்ரீ அருணகிரிஸ்வாமிகள் தாம் இயற்றிய அனுபூதிக்குக் "கந்தர் அனுபூதி" எனப் பெயரிட்டதன் கருத்து யாதாயிருக்கலாம் என்பதைப் பற்றி முன் சஞ்சிகையில் விவரித்தோம்.

இனி அவர் பாடிய அநுபூதி எத்தனை செய்யுட்களடங்கியது என்பதிலும் சில மாறுபட்ட அபிப்பிராயங்கள் காணப்படுகின்றன.

நீர் பெருஞ்சடை யாரருள் தேசிக முருகேச
வரந்தருவாய் அடியேனிடர் களைவாயே.

1. கௌலமார்க்கம் அல்லது சக்தி உபாசனைக் காரர்கள், அண்டத்திலுள்ளது பிண்டத்தில் என்ற வகையில் பிரபஞ்சமே ஸ்ரீ சக்கரத்துள் ளடக்கம். அஃது நாற்பத்து மூன்று கோணங்கள் கொண்டதாக அமைத்து அர்ச்சிக்கப்பட்டு வரு கிறது. இந்த உண்மையையறியும் ஞானுனுபவத் தையே தமது அநுபூதியிலே சூசகமாகக் குறிப் பது பற்றி, அவ்வநுபூதியும் நாற்பத்து மூன்று செய்யுட்கள்கொண்டதாயிருக்கலாம் என்கிறார்கள்.

2. மற்றொருசாரார் "பேசா அநுபூதி பிறந்ததுவே" என்னும் நாற்பத்து மூன்றும் செய்யுளைப் பாடி யதும் அவருக்கு பூரணஞானம் ஏற்பட்டுவிட்டது. பிறகு மோன நிலையில் ஆழ்ந்திருக்கக் கூடும். அதற்குப் பின் அவர் பாட வேண்டுவது யாது உளது. ஆகவே, அம்மட்டில் நிறுத்திவிட்டார். மேற்கொண்டு அவர் பால் பேரன்பு படைத்தவர் கள் மற்றப் பாட்டுக்களைப் பாடியிருத்தல் கூடும் என்கிறார்கள்.

3. மற்றும் சில பதிப்பாசிரியர்கள் அசல் அநுபூதி யையே தாம் கண்டு பிடித்து அதிலுள்ள செய்யுட் களையே பதிப்பித்திருப்பதாகவும், அஃது நூற்றி யொன்று செய்யுட்க ளடங்கியது என்றும் திட்ட மாகக் கூறுகிறார்கள். சில உரையாசிரியர்களும் நூற்றியொன்று செய்யுட்கட்கே உரை கூறியிருப் பதும் இதை யனுசரித்ததாகலே யிருக்கிறது.

புளக மேவ தமிழ் புனைந்த முருகோனே
நலனதாக அடிய னென்று பெருவேனோ.

4. மற்றுமோர் உரையாசிரியர் கூறுவதைப் பாருங்கள். "மறை நூலுக்கு, நூறு என்ற எண், உயர்வையளிக்கும் எனக் கருதி சிலர் அருணகிரியார் நெறியைப் பின்பற்றி இப்பிரபந்தத்தினை நூறாக்கினர்; அவரே காப்புச் செய்யுளையும் கூட்டினர்" ஆனால் அவையாவும் அருணகிரியார் வாக்கல்ல என்று சொல்லும் இவர், தொடர்ந்து அதே முகவுரையில் கூறுவதாவது "யாம் இந்நூலின் செய்யுட்களை எமது நிஷ்டையின் கண், முருகபிரானாலேயே அளிக்கப் பெற்று அநுபவ வாயிலாக உணர்ந்ததின் பயனாக இந்நூறு செய்யுட்களும் அநுபூதி செய்யுட்களே எனப் பறைசாற்றும் வன்மை கிடைத்தது" என்கிறார். இக் கூற்று சற்று முரண் பட்டதாக வன்றோ காண்கின்றது.

5. மேலும் இவர் "பஞ்சக்கர" என்னும் வடமொழித் தொடர் இருப்பது பற்றி, காப்புச்செய்யுள் அருணகிரியார் செய்ததல்ல என்கிறார்.

6. ஆனால் பெரும்பாலானோர் காப்புச் செய்யுளும், மற்றும் ஐம்பத்தொன்று செய்யுட்களுமடங்கியது அநுபூதி, என்றே கருதுகிறார்கள். இனி இவர்கள் இவ்வாறு கூறியது எவ்வளவிற் பொருந்தும் என்பதைச் சற்று ஆராய்வோம்:—

திருமூலர் முதலிய சித்தர்கள் தாம் இயற்றும் நூற்களிலடங்கிய செய்யுட்களின் எண்ணிக்கையைச் சேர்த்தே அந்நூலுக்குப் பெயரிடுவது வழக்கம். உதாரணமாக :—

பொன் பரவு கதிர் வீசு வடிவேலா
இன்பமுற மகிழ் கூறமைந்து மயிலுடனாடி வரவேணும்.

"மூலன் உரை செய்த மூவாயிரந்தமிழ்" திருமந்திரம், மச்சமுனி 800, கொங்கணர் கடைக்காண்டம் 500, தேரையர் காவியம் 1000, சட்டமுனி ஞானம் நூறு, போகர் ஏழாயிரம் முதலியன. அம்முறையில் நமது அருணகிரியார் தாம் இயற்றிய நூல்களில், திருப்புகழ் 10,000, அலங்காரம் 107 என்பதாக நூலின் பெயரோடு அந் நூலிலடங்கிய பாட்டுக்களின் எண்களையும் சேர்த்துச் சொல்லாமல், தனித்து, திருப்புகழ், கந்தர் அலங்காரம், கந்தர் அந்தாதி, கந்தர் அநுபூதி, திருவகுப்பு, வேல் விருத்தம் என்றே கூறியுள்ளார். ஆகவே நூலாசிரியர் வாயிலாக அவர் செய்த நூல்களின் எண்ணிக்கையோ, அல்லது ஒவ்வொரு நூலிலும் அடங்கிய செய்யுட்களின் எண்ணிக்கையோ, அறியச் சான்றுகளில்லை.

(1a) கௌல மார்க்கிகள் கூறுகிறபடி ஸ்ரீ சக்கிரத்திற்கு கோணங்கள் நாற்பத்தி மூன்று என்றாலும், அதிலடங்கும் அக்கரங்கள் (எழுத்துக்கள்) ஐம்பத்து ஒன்று அன்றோ? சக்கரமாக அமையப் பெறும் கூட்டில் வாழும் சீவன்கள் அல்லவா ஐம்பத்தியொன்று அக்கரங்களும். ஆகவே கூட்டின் எண்ணைக் காட்டிலும் உயிரின் எண்ணுக் கல்லவா மதிப்பு. ஆக இக்காரணம் பொருத்தமாகக் காணவில்லை.

(2a) "பேசா அநுபூதி பிறந்ததுவே" என்று பாடிய பின்பு, அருணகிரியார் வேறு நூல்களையே பாடவில்லையா? அந்தச செய்யுள்தானே அவர்

புகழான பூமிமிசை மடிவா விருதவகை
பொலிவான பாதமலர் அருள்வாயே.

பாடிய கடைசிச் செய்யுள்? அப்படிக் கூறச் சான்றுகள் எதையும் காணவில்லையே !

நேரடியாகச் சான்றுகள் இல்லாவிடினும், இந்நிலையில் வேறு எவரேனும் அவ்வாறு உணர்ச்சி மிகப் பாடி, அறிவும் ஞானமும் ஏற்பட்டு உடனே பாடுவதை நிறுத்திவிட்டாரோ எனில்,—மாணிக்கவாசக சுவாமிகளின் வாசகத்தைப் பாருங்கள்.—

காட்டாதன வெல்லாம் காட்டிப் பின்னுங்
கேளாதன வெல்லாங் கேட் பித்தென்னை
மீட்டேயும் பிறவாமற் காத்தென்னை யாட்கொண்டார்
.... (இனி)

அலறிடேன், உளரிடேன், ஆவிசோரேன்
முன்னவனே முறையோ நானுனவாறு.........

(திருச்சதகம்)

திரு மாணிக்க வாசகப் பெருமான், திருப் பெருந்துறையில் குருந்த மரத்தடியில் தபம் செய்து வரும் சமயம் ஓர் தினம் திடீரென தீப்பிழம்பு தோன்ற, அதில் சிவபெருமான் காக்ஷி அளித்து மறைய, அவருடன் சிவனடியார்களும் மறைய, தாம் மட்டில் தமது குருநாதன் கட்டளைப்படி தனித்து ஓர் கொன்றை மரத்தடியில் நின்றார். (அச்சமயம் அவரது உள்ளம் எவ்வாறிருந்திருக்கும் என்பதை அடியார் ஊகித்துக் கொள்ளுங்கள்) அங்ஙனம் அடியார்களுடனும் மறைந்த அக் காட்சியைக் கண்ணுற்ற நம் மாணிக்கவாசகப் பெருமான், அதையே நினைந்து நினைந்து, நெக்குருகி, அழுது, மூர்ச்சித்துப் பிறகு எழுந்து, இனியும் தமது குருவின் வடிவைக்

உறுஜக ரக்ஷணி நீராவாரணி நருசேயே
மயிலுறை வித்தவுருதா ராமணி பெறுவேனே

காணாது வாழ முடியாது எனக்கருதி, அவ்வமயம் இத் திருச்சதகத்தைப் பாடுகிறார்.

விளக்கம்: "தொட்டுக் காட்டாத வித்தை பாழ்" என்பர்; அக்குறை நீங்க எம் குருநாதன் எது எதைத் தொட்டுக் காட்டவேண்டுமோ அதை அவ்வாறு காட்டியும், எவற்றினைச் சுட்டிக் காட்டி சமிக்ஞையினாலும், சங்கேதத்தினாலும் சொல்ல வேண்டுமோ அவற்றினைச் சொல்ல என் செவி குளிரக் கேட்டும், எமக்கு மறு பிறவி வாய்க்காத வகைக்குப் பேரறிவையும் அளித்து அனுக்கிரகித்துச் சென்றபின், இனி யான் எதற்காக அலற வேண்டும், ஊளர (பாட) வேண்டும். எதற்காக இச் செய்கைகளில் என் மனச் சோர்வையும் ஆவியின் சோர்வையும் அடைய வேண்டும். முன்னவனாகிய எம் குருநாதா! நீங்கள் நாளை பாவிக்கும் நிலை என்னுள் வந்த பின்பு, இங்ஙனம் யான் சோர்வடைதல் முறையோ, அன்று, என்பதாக மேலே கண்ட அடிகளில் கூறிவிட்ட இவர், மேற்கொண்டு அடைய வேண்டுவது யாது, அல்லது பாடிப் பெறவேண்டியது தான் யாதுளது; ஆகவே, அவரும் மேற்கொண்டு பாடாமல் நின்றிருக்கலாமன்றோ? அச் சதகத்தின் பிற பகுதியை வேறு யாராவது பூர்த்தி செய்திருக்கலாமே. பின் என்ன நடந்தது, மாணிக்கவாசக சுவாமிகளே அச் சதகத்தை முழுதும் பாடி முடித்துப் பின்னரும் அநேக பாடல்களைப் பாடியுள்ளார்.

அவ்வாறே நமது அருணகிரியாரும், "பேசா அநுபூதி பிறந்ததுவே" என்ற பாட்டுடன் நிறுத்தாமல், மேற்

பகவதி பிருகுட ரேந்து காரணி தருகோவே
பிருத்தி பெறஅருள் சேர்ந்து வாழ்வது மொருநாளே.

கொண்டு தொடர்ந்தும் மற்றும் பல பாட்டுக்களைப் பாடியு முள்ளார் என்பதைக் கூறவேண்டியதில்லை.

(3a 4a) சாதாரணமாகப் பத்துப் பத்துச் செய்யுட்கள் கொண்ட நூல்களில், அந் நூலுக்குப் பத்து என்ற சொல்லைச் சேர்த்தோ, பதிகம் என்றோ கூறுவது வழக்கம். உதாரணமாக, திருநாவுக் கரசு சுவாமிகள் பாடிய பதிகங்கள் யாவும் 10 செய்யுட்கள் கொண்டவை. மாணிக்க வாசகர் இயற்றிய அச்சோப்பத்து, அதிசயப் பத்து, சென்னிப்பத்து முதலிய யாவும், பத்து செய்யுட்களாலாகியவை. அவ்வாறே நூறு பாட்டுக்கள் கொண்ட நூலுக்கு "சதகம்" என்று சேர்த்தே கூறுவது வழக்கம். குமரேச சதகம், கோவிந்த சதகம், திருவேங்கடசதகம், தண்டலையார் சதகம், அறப்பளீசுவரர் சதகம் முதலியன. நமது அருணகிரியாரும் நூறே செய்யுட்களடங்கியதாக அநுபூதி பாடியிருப் பின் அவர் அதை "கந்தர் சதகம்" அல்லது அநுபூதி சதகம் என்றோ கூறியிருக்கலாம். அவ்வாறு நமது நூலாசிரியர் கூறாததினால், இவ்வநுபூதி நூறு அல்லது நூற்றியொன்று செய்யுள்கள்தான் அடங்கியது என்று திட்ட மாகக் கூறுவது எங்ஙனம்?

5 (a) கந்தர் என்பது தமிழ்ச் சொல், அநுபூதி வட சொல். தாயுமான சுவாமிகள் போன்று நமது

உன் அடியாராய் வழிபடுநரவரோடு அருளாதரமாயிடு மகநா ஞனதோசோல அருள்வாயே.

அருணகிரியார், பெருவாரியாக வடசொல்லை உபயோகப்படுத்தாவிடினும் அவர் வடசொல்லில் பரிசயமற்றவர் என்று கூறமுடியாது. நிற்க வடசொல்லை உபயோகப்படுத்தியதால் அச்செய்யுள் அவர் இயற்றியதல்ல என்றும் கூறுவது நன்றன்று. ஆகவே பஞ்சக்கரம் என்ற வடசொல்லை உபயோகப்படுத்தி யிருப்பதால் காப்புச் செய்யுளை இவர் இயற்றவில்லை என்று கூறல் முறையன்று.

நிற்க, காப்புச் செய்யுள் இயற்றியது அருணகிரியார் அல்ல என்று கூறுபவர், இச் சஞ்சிகையில் தொடர்ந்து வரும் காப்புச் செய்யுளின் விளக்க உரையை நோக்கிய பின், நமது அருணகிரியாரின் பெருமையையும் அவரது ஆழ்ந்த அறிவையும், அவர் இந்த உத்தம நூலுக்கு இச் செய்யுளைக் காப்புச் செய்யுளாக வைத்ததின் கருத்தையும் ஒருவாறு அறிந்து, பிறகு இச்செய்யுளை இயற்றிய பெருமை அவரைச் சார்ந்ததா இல்லையா என்பதை நிர்ணயிக்கட்டும்.

திருப்புகழுக்கே ஓர் புத்துயிர் அளித்தது போன்று வெகு பிரயாசைப்பட்டு, விடாமுயற்சி, தீவிர முருக வேட்கையுடனும் கூட அநேக ஏட்டுப் பிரதிகளைப் பரிசோதித்துப் பின்னர் பதிப்பித்துள்ள திருத்தணிகைச் செல்வன், த. சுப்பிரமணிய பிள்ளை பதிப்பில் அநுபூதிச் செய்யுள்கள் 51 ஐயே காண்கிறோம். இதைவிட வேறு எந்த ஆராய்ச்சியாளரும் தக்க சான்றுடன் பதிப்பித்ததாகக் காணவில்லை.

குலவு தோகை மீதாறு முகமும் வேலு மீராறு
குவளை வாகும் நேர்காண வருவாயே.

முருக வேட்கை பூண்ட நமது அருணகிரியார், ஆறு முக பிரபாவமும், ஆறுதார நிலையும் ஞானனுபவ மூலம் அறிந்தவர் என்று கூறச் சான்றுகள் தேவையோ? அவர் அதில் தேர்ச்சியல்லவா பெற்றவர். மூலாதாரம் முதல் ஆறுதலங்களிலும் முறையே 4, 8, 10, 10, 16, 2 தளங்கள் (அதாவது பத்மங்கள்) உள. தளம் ஒன்றுக்கு ஓர் அக்கரம் விதம் 50 எழுத்துக்களும், சகஸ்ராரத்தில் மௌன எழுத்தாகிய பிரணவமும் அமையப் பெற்றது என நூல்கள் வாயிலாக அறிய முடிகிறது. ஆகவே நமது அருணகிரியாரும் இவ்வாறுதார ஸ்வரூபத்தை உணர்ந் தவர் ஆதல்பற்றி அவர் இயற்றிய அனுபவ நூலாகிய அனுபூதியிலும் 51 செய்யுட்கள் அமையப்பெறின் அது முறைதானே.

" ஆதார மோராறு மைம்பத் தோரட்சரமும்
சூதான கோட்டை யெல்லாம் சுட்டான் துரிசறவே
(பட்டினத்தடிகள்)

ஐம்பத்தோரக்கரங்களாகிய ஆறு ஆதாரத்திலுமுள்ள தத்துவங்கள் யாவையும் சுட்டெரித்த பின்னரே மேலான பதவியை யடைய முடியும் என்கிறார் பட்டினத்தடிகள்.

தவிற, "ஆறுதாரமும் தொல்லையடி
அதற்கப்பால் ஒன்றுமில்லையடி" (ஞானக்கும்மி)

இந்த ஆறு ஆதாரங்களையும் அறிவதுதான் தொல்லை. பிறகு அதை அறிந்த பின் ஐக்கியப்படல் எளிது என் கிறார் ஞானக் கும்மியார். அவ்வாறே நமது அருணகிரி யார் இயற்றிய அநுபூதியில் முதல் ஐம்பது செய்யுட்களை யும் முறையே தூல, சூக்கும, காரணக் கருத்துகளுடன்

வரியவிபு லாவு துற்ற இருபுயம வாவி வெற்றி
மலரணையில் நீய ணைக்க வரவேணும்.

கண்டு அனுபவிக்கப் பாக்கியம் பெற்றவர்கட்கு ஐம்பத்து ஒன்றாவது செய்யுளில் கண்டபடி "அவர்" உருவாகி, அருவாகி, கதியாகி, விதியாகி, ஒலியாகி ஒளியாகிய ஞானப் பிழம்பு ஆகி கடாட்சிப்பார் என்பதில் யாது ஐயம்? இதற்குமேல் " அனுபூதி என்ற தலைப்பிட்ட நூலில் பாட வேண்டுவதுதான் யாது?" ஆகவே நமது அருணகிரியார் நேரடியாக அநுபூதிச் செய்யுள் எத்தனை என்று கூறு விடினும், அந்நூலின் கருத்தை நோக்குங்கால் அக்கரத்திற்கு ஒன்று வீதம் 51 செய்யுள்கள்தான் அடங்கியது என்று ஏன் திட்டமாகக் கூறக்கூடாது?

மேலும் இம் முறையில் நமது மாணிக்கவாசக சுவாமிகளும் தாம் இயற்றிய நூல்களின் தொகைகளைக் குறியாவிடினும், அவர் திருப்பெருந்துறையில் 23-ம், மதுரையில் 8-ம் உத்தரகோச மங்கையில் ஒன்றும், திருத்தில்லையில் 18-ம் ஆக மொத்தம் 51 நூல்களைத்தான் செய்திருக்கிறார்.

சிலர் கந்தர் அனுபூதிச் செய்யுட்கள் யாவும் மந்திரத்துக் கொப்பானவை. ஒவ்வொன்றையும் 108 முதல் 1008 முறை உருப்போடல் வேண்டும் என்று கூறும் போது, மந்திரங்கள் யாவும் 51 அக்கரத்திலடங்கியது தானே! அதற்குப் புறம்பாகவும் ஓர் எழுத்துண்டோ? ஆக மந்திர ரூபமான செய்யுட்களும 51-ஆக இருத்தல் தானே முறை.

இப்படிப் பல்துறைகளிலும் கவனிக்கும் போது திருமாணிக்க வாசகரைப் போன்று இவரும் 51 செய்யுள்கள் அமைத்தே அநுபூதி பாடி யிருக்கக்கூடும். அஃதே

திறல்கூ லாவிய சேவடி வந்தித் தருள்கூடத்
தினமு மேமிக வாழ்வுறு மின்பைத் தருவாயே.

ஞான சாஸ்த்திரத்தையும் மந்திர சாஸ்த்திரத்தையும் அறு சரித்ததாகவிருக்கும் என்ற முடிவுக்கு வரவேண்டி யிருக்கிறது.

தேரையர்

(பார்க்கவதாஸன்)

இவர் பதினெண் சித்தர்களில் ஒருவர். வைத்தியத்தில் சிங்கத்தையொத்தவர். மூலிகைகளின் பிரயோகத்தில் கரை கண்டவர். அவற்றின் குணகுணங்களை உலகிலுள்ள மக்கட்கு எடுத்து உரைத்தவர்.

வரலாறு: முதல் சங்க புலவர்கட்கு அகஸ்த்திய பகவான் ஆயுள் வேதம் சொல்லிவந்தார். அப்போது அங்குள்ள திரணக்கிய முனிவர் தம்மைச் சிரநோய் நீண்ட நாட்களாய் வாட்டி வருவதாயும் அதற்குத் தக்க சிகிச்சை செய்யுமாறும் வேண்டினர். எல்லாவித வெளிப்பிரயோகங்களும் செய்து பின்னர் நோய் தீரச் சிரசைச் சற்று திறக்கி (அறுத்து) யாகவேண்டுமென்று கண்டு அவ்வாறு செய்ய, அப்போது அங்கு ஓர் தேரை, மூளையைப் பற்றிக் கவ்வி யிருப்பதைக் கண்டார். அதைக் கொரடாவால் எடுக்க முயற்சிக்க, தேரையும் கவ்வுவிடாதது கண்ட, வரரிஷியின் குமாரன் (தேரையர்) தந்திரமாக ஓர் மண் பாண்டத்தில் ஜலத்தை நிரம்ப ஊற்றி தேரை எதிரே காட்ட, தேரையும் கொப்பெனவே மூளையைவிட்டு நீரில் குதிக்கலாச்சு. நாற்றிசையும் புகழுமந்த அகத்தியரும், அவரை மிகவும் மெச்சி அவரது நல்லறிவு கண்டு, மனமுவந்து, யென் சிஷா

கருணைப்பிர காசவுள தருளுற்றிட ஆசில்சிவ
கதிபெற்றிட ஞானவையை யொழிவேனே

பொன்னரங்கா, பொலிவான தெள்ளமுர்த சிங்கமே, தேரையா, (காரணப் பெயர்) என்று மெச்சி, அவருக்கு மிகவும் பொருள்கள் கொடுத்து ஞானோபதேசமும் செய்து வைத்தார். மற்றும் சிறப்பாக மூலிவர்க்கம், பரிபாஷை யாகவும் போதித்து வைத்தார்.

சிறிதுகாலம் அகத்தியருடன் தங்கிப் பிறகு தேரையர் நர்மதா நதி தீரம் சென்று அங்கு பல சீடர்களுடன் வாதங்கள் செய்ய ஆரம்பித்தார். மூலிவர்க்கங்களில் கரை கண்ட இவர் தரணி யெல்லாம பொன்மய மாக்கினல் ஒருவரை யொருவர் மதிப்பாருண்டோ; கோமான்களேது, குருவேது, சீடர்தானேது என்று கருதி இவரது அடாத செயலைக்குறித்து அகத்தியரிடம் அங்குள்ள முனிகள் முறையிடவே, அகத்தியரும் சீற்றங்கொண்டு தேரைய ருக்குத் தீரா நோயை விளைவித்தார். அதை யறிந்த தேரையரின் சீடர்கள், அந்நோய் தீர்க்கும் முறைகளை அகத்தியரிடமிருந்து தேரையரும், தேரையரிடமிருந்து தாங்களும் கற்றுணர்ந்தமையால், நொடியில் (தமது குரு வின்) நோயைத் தீர்த்துமே விட்டார்.

மறு முறையும் தேரையர் முன் போலத்துவங்க, அகஸ்தியரும் தேரையரை நோக்கிக் "கிறுத்து" வெனக் குறிப்புடன் கேட்டார். கொப்பெனவே தேரையரும் வீழ்ந்து அடிபணிய, அகஸ்த்தியரும், "சமாதிக்கேகுக" வென்றுரைத்தார்.

பிறகு தேரையர் சமாதியில் ஒருமுறை 10 வருஷமும் மறுபடி 20 வருஷமும் தங்கி, வெளிவந்தார். பிறகு முந்

துணையாய்க் காவல்செய் வாயென் றுரைசப் பாவிகள் பாலுந்
தொலையாப் பாடலை யானும் புகல்வேனே.

நூறு வருஷகாலம் சஞ்சரித்து, பங்குனிமீ மூலம் இரண்டாம் பாதத்தில், தமது குருநாதன் அகஸ்த்தியரின் ஆக்ஞைப்படி நர்மதாநதி தீரத்துக்கு மேற்கே சமாதிக்குப் போகும்போது, அங்கு மூச்சடக்கி வெகு காலமாயிருக்கும் ஓர் சித்த புருடரைக்கண்டார். கண்டவுடன் கும்பமுனி சீடன் தாம் என்றும் தம்மை கடாக்ஷிக்க வேண்டுமென்று வணங்கிச் சிலகாலம் தங்கிச் சமாதி சென்றார். தேரைய மாமுனிவரது முக்கிய சீடர் யூகிமுனி.

இவ் வண்ணம் தேரையரின் சரிதம் சித்தர்கள் நூல் வாயிலாகக் கிடைக்கிறது.

தேரையர் செய்த நூல்கள்பல. அவற்றுள் தேரையர் மருத்துவ பாரதம, தைலவர்க்கம், ஞான சாஸ்த்திரம், கரிசல், வைத்தியம் 500, வைத்தியம் 1000 முதலியவை இப்போது பழக்கத்தில் இருந்து வருகின்றன. இவைகளைத் தவிர இன்னும் அநேக நூல்கள் முக்கியமாக (இவரால் செய்யப்பட்டவை இப்போது காணப்படவில்லை. (ஞான சாஸ்த்திரங்கள்) இவரது சாத்திரங்களை நேயர்கள் யாவரும். கற்றுணர்ந்து நலனடையுமாறு வேண்டுகின்றனம். முனிவர்கள் வாழி, சித்தர்கள் வாழி, வாழ்க தமிழ் மறைகள்.

கந்தர் கலிவெண்பா

(ரசபதி)

உய்யவழி

கற்றிருக்கலாம்; கேள்வி ஞானம் பெற்றிருக்கலாம். பயன் என்? கீழ்மையிற் பயின்றிருக்கும் மனம், பயனைக் கருதித்தான் எந்தப் பணியையும் செய்யும்.

பழவினை பாவந் தீர்த்து வடியேனைப்
பரபுகழ் பாடென் றுட்கொ டருள்வாயே.

கையில் காசு; வாயில் தோசை, இது ஒரு பழமொழி. பயனிருந்தால் பாய்வேன்; இல்லையாயின் பதுங்குவேன் என்னும் குள்ளநரியின் சாயை, அப் பழமொழியில் கோடிட்டுளது. இதனிலிருந்து பலரால் மீள முடிவதில்லை. மீறி முயலினும் சூழ்நிலைகள் பல தோன்றி சுழிக்கச் செய்துவிடும். இதன் விளைவு துன்பம்; இந்த வாழ்க்கையே துன்ப மயந்தான். பாவ வாசனையான இதை மாற்றப் பரமன் திருவருளால்தான் இயலும். அந்த அருட்பேற்றிற்கு வழியாது ?

ஒவ்வொரு நாளும் கோயிலுள் நுழைவம் ஒன்றையும் வேண்டோம். பாராயணம் செய்வம். நாம ஜெபம் செய்வம். தியானத்தொடு தொடர்பு கொள்வம். அவ்வளவில் சிறிதேனும் அமைதி பெற்றுத் திரும்பவும் 'பாலித்து நட்டம் பயில வல்லானுக்கே பல்லாண்டு பாடுவம்'! இங்ஙனம் நாள்தோறும் 'கொண்ட தொடர்பால் சிறிது சிறிதாகச் சேரும் சிவபுண்ணியம். அத்தொடர்பு, பயனை மறந்து பணிசெய்யக் கற்பிக்கும். இது தான் வழி. இதற்கு அயலாக வேறு உய்ய வழியில்லை.

முன்னேற்றம்

இந்நிலை பிறந்தபின் ஆன்மா சரியையிற் சாரும்; கிரியையில் ஏறும்; யோகத்தில் மோகமுறும். கனியும் பயனை இங்கு கருதுவதேயில்லை. 'என் கடன் பணிசெய்து கிடப்பதே' என்று இருந்து இன்புறும். மூன்றினும் முயன்று முன்னேறும உயர்நிலை கண்டு, இரக்கம் கொள்ளும் முருகன் அருள். வரவரப் பெருகும். அவன்

புலமாயப் படிமிசை போவேன் றேட்டி அடிமையை நீவந் தேத்தி பரகதி தானுங் காட்டி யருள்வாயே.

பேரருள், சரியையிற் சாரும் உயிர்களைச் சாலோகம் சார்விக்கும்; கிரியையின் ஏறுமுகம் கண்டு சாமீபம் வழங்கும்; யோகப் பாகிற்கு உரியபடி தன் சாரூபம் தரும்.

சாலோகம் என்பது, அருள் உலகம்; சாமீபம் என்பது, அருளுவதில், இறைவன், உயிர் தன்னை அணுகி நிற்கச் செய்யும் நிலை. சாரூபம் என்பது, உயிர்க்குத் தன் உருவச் சாயை - தரும் தன்மை. மூன்றினும் மூண்டு முயன்று, முப்பதமும் பெற்று, அவ்வப்பத இன்பங்களை அநுபவிக்கச் செய்கின்றான் ஆறுமுகப் பெருமான்.

சுயநலத்திற் சுழித்துச் சுருங்கி யிருந்த உயிர் உணர்வை, ஒவ்வொரு நிலையினும் சிறிது சிறிதாக விரியச் செய்கிறான் அந்த விமலன். உணர்வு மலர மலர, உயிர் தன் கீழ்மை நிலைமையை உணரும்.

உணர்ச்சியின் வளர்ச்சியில், முன் பயின்றிருந்த மருள்நிலை சிறிது சிறிதாக மறைந்து வரும். அந்நிலைக்குத் தக்க அருள்வேட்கை யமையும். மருள் நிலையில் துன்பமே கண்ட ஆன்மா, அருள்வேட்கையில் இன்பம் உதய மாவதை யினிது உணரும்.

அருட் பதிவு

வேட்கையின் விரிவிற்குத் தக்க அளவு, உயிர் உணர்வில் அருள் வந்து பதியும் பதிவு, பக்குவ நிலைக்குத் தக்க பயன் தரும்.

நெஞ்சாலஞ் சாற்போங் கியவினை விஞ்சா தேன் பாற்சேன்
நகலிட நின்தாள்தந் தாட்கொண்டருள்தர நினைவாயே.

(1) பச்சை வாழை மரத்தைச் சுலபமாகப் பற்ற வைக்க முடியாது. அதுபோன்ற ஆன்ம உணர்வில், அருட்கனல் பாய்ந்தாலும் பயன் விளைவதில்லை; இது மிக்க மந்த நிலை.

(2) பச்சை விறகை அதிக சிரமப்பட்டு பற்ற வைக்க நேரும். அதுபோன்ற உயிரின் உணர்ச்சியில் சித்கனல் சிறிது சிறிதாகத் தன் கருமத்தைச் செய்யும்; **இது மந்த நிலை.**

(3) உலர்ந்த விறகைச் சிறிது முயற்சி செய்து பற்ற வைக்கலாம். அதுபோன்ற ஆன்ம உணர்வில், ஞானக் கனல் சிறிது முயன்று பயன் செய்யும்; **இது தீவிர நிலை.**

(4) கற்பூரம் நெருப்பு காட்டியதும் பற்றும். அது போல் ஞானக்கினி பாய்ந்து, மலத்தை யகற்றி, ஆன்மாவைப் பித்தளை மாற்றுத் தங்கம் ஆக்கும்; பட்சம் காட்டிப் பணிசெய்யக் கற்பிக்கும்; **இது அதி தீவிர நிலை.**

நெகிழ்விக்கும் இந்த நான்கு வகைகளாக உளது **சத்திநிபாத நிலை.** சத்தி - அருள்; நிபாதம் - பதிவு.

பிறவித் துன்பத்தை வேரறுத்துப் பேரின்பம் வழங்க, உயிரை இங்ஙனம் சிறிது சிறிதாகப் பக்குவப் படுத்தும் காலத்தைப் பார்த்துக் கொண்டிருக்கின்றான் பரமன்.

கால நிலை

விரும்பும் பொருள் உண்டு; உலகில் நாம் வெறுக்கும் பொருள்களும் உள. இவ்விரண்டையும் காண்கிறபோது அவைகளை விரும்புவது இல்லை; வெறுப்பதுவும் இல்லை. நண்பரை, உறவினரைக் கண்டபோது நயப்பதில்லை;

உருகி யன்பினோடு உணர்நினைந்து நாளும் உலக மென்றுபேச அறியாத
உருவமென் றிலாதபருவம் வந்து சேர உபயதுங்கபாத மருள்வாயே.

DES LAIT

பகைஞரை, அயலவரைக் கண்டத்தால் பகைப்பதும் இல்லை. எப்பொருளினும் நட்பும் இல்லை பகையும் இல்லை. இதன்படி நல்வினைப் பயனுன இன்பமும், தீவினைப் பயனுன துன்பமும் நேர்கின்ற நிலையில், அவைகளில் விருப்பு வெறுப்பின்றி நிற்றல் இருவினை யொப்பு எனப் பெறும்.

குலமகளும் விலைமகளும்

ஒருவனுக்கு வைப்புக் கிழத்தியான தாசி யொருத்தி உண்டு; இது அவனது தீவினையின் பயன். மணம் செய்த மனைவியும் இருக்கின்றாள்; இது அவனது நல்வினையின் பயன். சிலகாலம் அவளிடம் சிலகாலம் இவளிடமாகக் காலத்தைக் கழித்தான். இடையில் தனது நல்வினையின் பயனுக, கனிவு மிக்க இல்லற நூற்களைக் கற்றான். அதன் பயனுக வேசை நட்பு அறமன்று என்று அறிந்தான். அவளை யகன்றான். மனைவியாளொடு மட்டும் வாழ்ந்தான். சிலகாலம் கழித்து துறவு நூற்களை யோதினன், அதன் பயனுக விரக்தி வளர்ந்தது. அந்நிலையில் மனையாட்டி யையும் மறந்தான். துறவு பூண்டான். அதன் பின் இரு வரைக் கண்ட இடத்தும், விருப்பு வெறுப்பின்றி யிருந்தான்.

அதுபோல், தீவினையும் நல்வினையும் செய்துகொண் டிருந்த ஜீவன், அற நூற்களை யறியும்; ஓதும்; உணரும். அந்நிலையில், தீவினை நீங்கிய நல்வினைகளையே நாடும்; அதன்பின் ஞான நூற்களை யறியும்; ஓதும்; உணரும். அவ்வழியில், பசுபுண்ணியமும் இறப்பிற்கும் பிறப்பிற்கும்

சகலத்துக் கழுமறச் சகலசற் குணம்வர உனது பொற்சரணம்
எப்பொழுது நட் பொடு நினைந்திட அருட் டருவாயே.

இடம் செய்யும் என்று தெளியும்; அதையுங் கைவிட்டு, ஞானத்தையடைய முயல்வதுவே தகுவதென்று முடிவிற்கு வரும். அதன்பின், புண்ணியம் பாவம் இரண்டினும் விருப்பு வெறுப்பின்றி யிருக்கும். உத்தம சத்திநிபாதம் உதிக்க வேண்டுமேல், இந்த இருவினை ஒப்பாகும் (சமநிலையாகும்) காலம் பிறக்க வேண்டும். அந்நிலையில், மூலமலம் நீங்க **சிவபுண்ணியம் மூளும்.**

பற்றத் தக்க பத்து

தெரிந்து செய்யும் சிவபுண்ணியம்; எதிர் பாராமல் விளையும் சிவபுண்ணியம்; உபாய சரியை; உபாய கிரியை; உபாய யோகம்; உபாய ஞானம்; உண்மை சரியை; உண்மை கிரியை, உண்மை யோகம்; உண்மை ஞானம் எனும் பத்து வகையாகச் சிவபுண்யம் பல்கும்.

இவைகளுள் முன்னுள ஒன்பதும், மலநிலையினிருந்த உயிர்கள் முயன்று செய்வன. இறுதியில் உள்ள உண்மை ஞானம், அருள் கூட்டுவிக்க உதிக்கும் அற்புதமான ஒன்று.

அதிசயப் பத்து

உயிர்கட்கு உண்மை ஞானம் உதிக்கச் செய்தபின், தத்துவ ரூபம், தத்துவ தரிசனம், தத்துவ சுத்தி, ஆன்ம ரூபம், ஆன்ம ஞானம், ஆன்ம சுத்தி, சிவ ரூபம், சிவ தரிசனம், சிவயோகம், சிவபோகம் என, அந்த அறுமுகன் அருள்நிலை பத்து விதமாகப் படரும்; இதை நினைதரு போழ்தே நெஞ்சம் நெகிழ்கின்றதுவே!

இந்த நிலை நேர்தற்குரிய பரிபக்குவம் பிறக்க எத்தனையோ பிறப்பெடுத்து, இடையறாது முயன்று இறந்து,

---

எனதற நினது கழல்பெற மவுன
வெல்லிரு நிப்ப தோன்று புகல்வாயே.

மீட்டும் பிறந்து, முயன்று முயன்று நிலை குலையும் உயிர்.

"எண்ணிலாத நெடுங்காலம் எண்ணிலாத பலபிறவி
எடுத்தே இளைத்து, இங்கு அலைவ நீங்கி;
இம் மண்ணின் வாழ்க்கை மெய்யாக மயங்கி
யுழன்றால்; அடியேன், உன் மாறாப் பெருமை
வரும் பாத வனசத் துணை என்று அடைவேனோ"

என்று பரமனை நினைந்து பல சொல்லிக் கதறிப் பதறி முறையிடும். பரிதாபகரமான இந்த நிலையில், அழுது அழைக்கும் உயிரை அருள் நோக்கம் செய்கின்றான் அந்த ஆதிமூர்த்தி.

இடையறாமல் ஆன்ம அறிவில் அறிவுக்கும் அறிவாக இருந்தவன் அந்த அத்தன்; எனினும், உயிரின் அறிவிற்கு ஒரு நாளும் புலனானதில்லை அந்த உமை குமரன். என்ன வியப்பு! ஜீவனது அறிவில் செறிந்தே யிருந்த அந்தச் செவ்வேள் பரன், அங்கிருந்து நீங்குகிறான்.

"பரத்தை அறிவித்து ஆவி சுற்றும் ஒளியாகி..........
..........அடியரின் ஆவிக்குள் நின்று உலவிவரு
பெருமாளே"

என்று, அந்த நாத கீத வேதத் திருப்புகழ் விமலனை விளித்தல் இங்கு நம் நினைவிற்கு வருகிற தல்லவா?

சரியை யாதியில் சார்வித்து, அவ்வப்பத இன்பங்களை அநுபவிக்கச் செய்து, உணர்வை மலர்த்தி, இருவினை ஒப்பு, மலபரிபாகம், சத்திநிபாதம் நேர்வித்தும் தன்னை யறியாது அலறும் ஆன்மாவை அருள் மிகுந்து நோக்கி

**நின் பதமல ருளத்தி னுளு நினைவுறு கருத்தர் தாங்கள்
பணியவு மெனக்கு ஞானம் அருள்வாயே.**

ஆன்ம அறிவிற்குப் புலனாகாமல் செறிந்திருந்த தனது நிலையினின்று வெளிப்படுகின்றான் செவ்வேள் பெருமான்.

சாமிநாதன் வருகை

ஆணவத் தளையுள் அகப்பட்டுள்ள ஆன்மாக்களை இன்ப வீட்டுள் செலுத்த வேண்டும் என்னும் கடல்போல் பெருகிய கருணையினால் அருள் திருமேனி தாங்கி, பூதக் கண்ணிற்கும் புலனாக வெளிப்பட்டு, குருபரன் என்ற திருப்பெயரையும் தாங்குகின்றான் குமரன். இங்கு வாழ்க அவன் திருவருள் என்று மெய்சிலிர்த்துக் கை கூப்பி வாழ்த்துகின்றது நமது வாய்.

அற்புதமான இச்செய்திகளை சுருங்கலாற்றுச் சொற்களால் எவ்வளவு அழகாகப் பாடுகின்றார் குமரகுருபரர்! கேளுங்கள்!

"சரியை கிரியா யோகம் சார்வித்து, —அருள்பெருகும்
சாலோக சாமீப சாரூபமும் புசிப்பித்து,
ஆலோகந் தன்னை அகற்றுவித்து, —நால்வகையாம்
சத்திநி பாதம் தருதற்கு இருவினையும்
ஒத்து வரும் காலம் உளவாகிப், —பெத்த
மலபரி பாகம் வருமளவில், பன்னாள்
அலமருதல் கண்ணுற்று அருளி, —உலவாது
அறிவுக்கு அறிவாகி, அவ்அறிவிற்கு எட்டா
நெறியில் செறிந்தநிலை நீங்கிப் —பிறியாக்
கருணை திருவுருவாய்க் காசினிக்கே தோன்றிக்
குருபரன் என்றுஓர் திருப்பேர் கொண்டு."

[சார்வித்து - அடையச் செய்து, புசிப்பித்து - அநுபவிக்கச் செய்து. ஆலோகந்தன்னை - தெளிந்த அறிவை, அகற்றுவித்து - விரிவடையச் செய்து. நால் வகையாம் சத்திநிபாதம் - மிகமந்தம், மந்தம்,

தீவிரம், மிகத் தீவிரம் என்னும் அருள் விரைவில் பதிதலாகிய நிலை. இருவினை யொத்தல் -(பிறவிக்கு மூலமான பாவ புண்ணியம் இரண்டிலும் சமநோக்கம். பெத்த மலபரிபாகம் - பந்தம் விளைவித்த மலம் நீங்கும் பருவம். அலமருதல் - (துன்பத்தொடு) திரிதல். உலவாது - ஓயாமல். அறிவிற்கு - உயிரின் அறிவிற்கு. அவ்வறிவுக்கு - அந்த உயிரின் அறிவிற்கு. எட்டா - அகப்படாத. செறிந்த - அடர்ந்த. பிரியா - நீங்காத. காசினிக்கே - உலகில்.]

உள்ளத்தை அள்ளும் இனிய இந்த அடிகளை ஊன்றி உணர்மின்கள்! குருபரனாக வரும் குமரேசன் கண் காட்டி நிலைகூட்டும் அற்புத அருள் விலாசத்தை அடுத்த இதழிற் காண்பம். (தொடரும்)

உ

செந்திலாண்டவன் திருவடி துணை

சென்னை

கீழ்க்கண்ட அகவல் புதுவருஷக் கொண்டாட்டத்தன்று
சரியான நேரத்தில் கிடைக்காத காரணத்தால்
அதை அன்று வாசிக்க முடியாமல்,
இங்கு பிரசுரிக்கப்படுகிறது.

அடியார் ஞாயிறு திருக்கூட்டத்தின்

விக்ருதி வருஷக் கொண்டாட்டம்

சென்னை

வரகவி- திரு அ. சுப்ரமண்யபாரதி பாடிய

வாழ்த்து

அகவல்

உலகா ருயிர்தொழ ஒருநாள் முனிவரர்
மலையா உளமுறச் சிலையா லடியமர்
நிலவார் சடைமுடி உலையா முழுமதில்
மலைமா துமையுடன் நிலைபேரரு ளுடன்

கோதில் கைலைக் குவட்டிவர் கோயிலில்
சோதி மடங்கல் ஆயினத் திருக்கையில்
இறைவியின் மடியினின் றிம்மென எழுந்து
பிறைமுடி சூடும் பிரானோரா வணம்
மேவியவன் விழி மூன்றையும் தன்கரப்
பூவிணை கொண்டு பொத்தலும் பேரிருள்
பூத்திடக் கண்டு புந்தி வியந்துமை
நீத்திட அந்த நிமிடமே யெங்கணும்
மாசில் பேரொளி வீசிட அதனைக்
கண்டதும் அற்புதம் கொண்டிக் காட்சியில்
திருமா லயன்முதற் றேவர்க ளெவர்க்கும்
பெருமான் முக்கட் பெருமான் என்கை
காட்டுந திருவிளை யாட்டயர் கந்தக்
கோட்டக் குமரனின் தாட்டுணைக் கமலம்
முடிமிசை கொண்டவர் நெடிய பேரருள்
பெருகுமா றுவந்து புரிகுவன் வாழ்த்தே.
ஞாலத் துயிர்களில் மேலெனும் மாந்தரில்
மேலவ ரெவரினும மேலவரெனச் சொலப்
பொறிபுலன் கரணம் பொருந்திய அன்பின்
அறிவு கைவந்த அடியார் ஞாயிறு
கூட்டமும் அந்தக் கூட்டமிவ் வுலகில்
தேட்ட முற்றிலகுஞ் சிந்தைமேற் கொண்டு
தன்பரங் கழலும் தனிமெய் யன்பின்
இன்பத் துயிலில் இணையில் திருப்புகழ்
பாடும் பணியே பணியாய் அருணலம்
தேடும் புனிதன் திருப்புகழ் மணியும்
வாழ்க பல்லாண்டு வாழ்க
வாழ்க பல்லாண்டு வாழ்க எனவே.

சுபம்.

ஆயுர்வேத வித்வான் B.V. பண்டிட்ஸ்
'சத்வைத்யசாலே' நஞ்சன்கூடு

யாவருக்கும்
I.D.L.21 ஸ்வாஸ்கோ இருமல், காசம் சுவாச வியாதிக்கு
I.D.L.72 ஹார்டோன் ஹ்ருதய வலி, மயக்கம், துடிப்புக்கு
I.D.L.75 டீப்சன் ஜீரண உபாதைக்கு
I.D.L.99 ஜ்வரேக் எவ்வித ஜ்வரங்களுக்கும்

மாதர்களுக்கு
I.D.L.71 பிமெலெக்ஸ் ரக்த, பல விருத்திக்கு
I.D.L.97 ஹிஸ்மெனு பலஹீனம் மயக்கத்திற்கு
I.D.L.81 ப்ரதமென்ஸ் ருதுக உபாதைக்கு
I.D.L.91 யூடிருல் கெர்ப்பாசய டானிக்
I.D.L.96 டோனடெல் ஜீர்ண விருத்திக்கு

குழந்தைகளுக்கு
I.D.L.12 காஸ்மஸ் கஸ்தூரி மாத்திரை
I.D.L.18 கர்ஜன் கோரோஜனை மாத்திரை
I.D.L.15 பாலக்ஸ் பேதியாக மாத்திரை
I.D.L.31 சிசுராக் ஜீர்ண டானிக்

அவசிய தின உதவிகள்
"நஞ்சன்கூடு பல்பொடி" I.D.L.6 (மெடிகேடட்)
பயோரியா, மற்ற பல் உபாதைகளுக்கு
I.D.L.78 கூலெக்ஸ் உஷ்ண, சமன தைலம்
I.D.L.55 ஜிஞ்சிப் அஜீர்ண, பித்த சமனி
'யூனிகான்' சுத்த தேன்

தபால் மூலமும், தங்கள் விலாசமுள்ள கவருடன் வியாதி விபரம் எழுதி, எங்கள் வைத்தியரால் தபால்மூலம் சிகிச்சை பெறவும்
லோகல் ஏஜெண்டுகள்

யுனைடெட் கன்ஸர்ன்
54, பந்தர் தெரு :: மதராஸ்.1

கலைமேவு ஞானப் பிரகாசக்
கடலாடி ஆசைக் கடலேறி;
பலமாய வாதிற் பிறழாதே
பதிஞான வாழ்வைத் தருவாயே

No. 1506
அசோகா
MILD SCENTED
ASOKA
ஊதுபத்தி
நெ. 1506